# இந்தியாவில் அனைத்து மாநிலங்களையும் பின்னுக்குத் தள்ளி 9.69 விழுக்காடு வரலாற்று சிறப்பு மிக்க பொருளாதார வளர்ச்சி!

## சட்டப்பேரவையில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பதிலுரை 11 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆகையால்தான் 60 சதவிகிதம் என்று நான் சொன்னவுடன், 70 சதவிகிதத்தை எப்போது தொடுவீர்கள் என்று உடனே கேட்டார்கள். அவைக்கு இன்று நான் கூறுகிறேன், அவர் சொன்ன 70-ஐ மட்டுமல்ல, 72 சதவிகிதம் conversion rate-ஐ தொட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மிகப்பெரிய, பிரம்மாண்டமான சொன்னதை செய்யும் முதலமைச்சராக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வீற்றிருக்கிறார். GIM நடைபெறும் போது, ராஜாவிற்கு ஒரு test வைத்தேன், அதில் pass ஆகிவிட்டார் என்று சொன்னார். எனக்கு pass செய்தால் மட்டும் போதாது distinction வாங்க வேண்டும். நிச்சயமாக அந்த 80 சதவிகிதத்தையும் நான் தொடுவேன் என்ற அந்த உறுதிமொழியை பேரவைக்கு நான் அளிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சர் அவர்கள் 2022-2024 வரை உங்களுக்கு நன்றாகத் தெரியும் ஜப்பான், சிங்கப்பூர், ஸ்பெயின், துபாய் மற்றும் அமெரிக்கா என 5 நாடுகளுக்கு முதலீடுகளை ஈர்க்கச் சென்றார். அதுவும் என்னவாயிற்று என்று கேட்டீர்கள். 36 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஏற்கெனவே 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்கெனவே முதலீடாக மாறிவிட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

2021 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 10 இலட்சத்து, 27 ஆயிரத்து 547 கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற 897 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையெழுத்திட்டிருக்கிறோம். இவற்றில் இப்பொழுது முதலீடு உறுதி செய்யப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டு, ஒருசில இடங்களில் உற்பத்தியே துவங்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 722 என்ற மகிழ்ச்சியான செய்தியை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) MoUs, இது only personal calculation இல்லை. MoUs, மட்டுமே சொல்கிறேன். அதிலே இந்த அளவிற்கு numbers எல்லாம் இருக்கிறது. இந்தியாவில் உள்ள பல மாநிலங்களில் நான் சொன்னதுபோல, ஏதாவது ஒரு துறையில்தான் இருப்பார்கள். நாம் மட்டும்தான் அனைத்து துறைகளிலும் textile, automobile, leather எதை எடுத்தாலும், number 1 ஆக திகழும் Super King ஆக நமது திராவிட நாயகன் அவர்களின் ஆட்சி திகழ்ந்து வருகிறது. மின்னணு உற்பத்தியில் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். மின்னணு உற்பத்தியில் electronics exports-ல் 2021 ஆம் ஆண்டு 1.66 billion dollar என்ற கணக்கில் நாம் இருந்தோம். 2022 ஆம் ஆண்டில் 1.86 billion dollar, 2023 ஆம் ஆண்டில் 5.37 billion dollar, 2024 ஆம் ஆண்டில் 9.56 billion dollar. ஆனால், இன்று ஏறத்தாழ 9 மடங்கு உயர்ந்து 14.65 billion dollar ஆக நமது exports உயர்ந்து இந்தியாவின் 41.23 சதவிகிதம் திராவிட மாடல் அரசின் இந்த தமிழ்நாட்டில் இருந்துதான் ஏற்றுமதி ஆகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**தொழில்துறை மகத்தான வளர்ச்சி!**

ஆகையால்தான் இந்திய அளவில் உற்பத்தி செய்யப்படும் பல உற்பத்திகளில் பல products-களில் நாம்தான் முதலிடத்தில் இருக்கிறோம். In fact தோல் அல்லாத காலணிகள் உற்பத்தியிலும் 38 சதவிகிதத்தில் இருக்கிறோம். எதை எடுத்தாலும் number 1 என்று சொன்னால், நாம் 15 சதவிகிதம், மீதி இருப்பவர்கள் 8 சதவிகிதம், 10 சதவிகிதம் என்றெல்லாம் இருக்காது. நாம் எப்பொழுதுமே 38, 40, 41 சதவிகிதம் என்று இப்படித்தான் இருக்கிறோம். அப்படி மகத்தான வளர்ச்சியைக் கண்டிருக்கிறது இன்று திராவிட நாயகன் அவர்களின் தமிழ்நாடு.

அந்தவகையில் ஜவுளித் துறையில், வாகனம் மற்றும் வாகன உதிரி பாகங்கள், தோல் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்று பல்வேறு துறைகளில் தமிழ்நாடுதான் முதலிலே இருக்கிறது. ஆனால், நாம் தொடாதது அண்ணன்கூட பேசினார்கள். Life sciences-ம் Blue Economy-ம். நமக்கு மிகப்பெரிய கடற்கரை இருக்கிறது. ஆனால், அதை இன்னும் நாம் முழுமையாகபயன்படுத்தவில்லையோ என்ற ஒரு ஏக்கம் இருந்து வருகிறது. அதனால்தான் திராவிட நாயகன் அவர்கள் Life sciences-லும், pharma industry-லும் நீங்கள் பெரிய ஒரு முன்னெடுப்பை எடுக்க வேண்டுமென்று கூறினார்கள். ஆகையால்தான், நாம் இப்போது ஒரு Life Sciences Park, Bio Science park உருவாக்கப்படும் என்று பட்ஜெட்டிலே அறிவித்திருக்கிறோம். அதைத்தாண்டி Bio Similars-ல் வெகு விரைவிலே மிகப்பெரிய உச்சத்தை தமிழ்நாடு நிச்சயமாகப் பெறும். தெலங்கானாவிடமிருந்து அந்த முதலீடுகளை ஈர்ப்போம் என்றல்ல. உலகத்திலே எங்கே இருந்து வந்தாலும் நிச்சயமாக தெலங்கானாவைவிட அதிக வளர்ச்சியைக் தமிழ்நாடு காணும் காலம் வெகு தூரம் இல்லை. வெகுவிரைவிலே TN marine transport manufacturing policy, அதாவது ship building-க்கு, ship building ஒரு மிகப்பெரிய தொழில். உங்களுக்கு நன்றாகவே தெரியும். அதன்மூலம் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்க்க முடியும். மிகப்பெரிய economy, மிகப்பெரிய வேலைவாய்ப்புக்கான வாய்ப்பாக இருக்கிறது. தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக்கப்பட்ட வளர்ச்சி கிடைக்க வேண்டுமென்றால் நமது கிராமப்புறங்கள் மிகப்பெரிய வளர்ச்சியைக் காண வேண்டும். ஆகையால்தான் நீண்டகாலமாக தென் தமிழகத்திற்கு அதேபோல, ஆகையால்தான் கிராமப்புறங்களைத் தேடித் தேடிச் செல்கிறோம். சமீபத்தில் ஜெயங்கொண்டத்திற்கும் கொண்டுபோய் ஒரு மிகப்பெரிய காலணி தொழிற்சாலையை அங்கே அமைத்து மிகப்பெரிய வேலைவாய்ப்பை திராவிட நாயகன் அவர்கள் உறுதி செய்தார்கள்.

## ஜவுளி–வாகனம்–தோல் தொழிற்சாலைகளில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதலிடம்!

**தென் தமிழகத்தில் தொழில் புரட்சி!**

நீண்ட காலமாக தென் தமிழகத்திற்கு எந்தவொரு தொழிற்சாலைகளும் இல்லை என்று சொல்லப்பட்டு வந்தது. ஆகையால்தான், VINFAST போன்ற மிகப்பெரிய நிறுவனங்களை எல்லாம் அங்கு கொண்டுபோய்ச் சேர்த்து 4 ஆண்டுகள் பேரவைத் தலைவர் அவர்களே, தென் தமிழகத்திற்கு வந்த முதலீடுகள் மட்டும் 30.32 சதவிகிதம் முதலீடுகளை, நம்முடைய தமிழ்நாட்டிற்கு வந்த முதலீடுகளில் 30.32 சதவிகிதம் முதலீடுகள் தென் தமிழகத்திற்கு மட்டுமே கொண்டு போய்ச் சேர்த்த பெருமை திராவிட நாயகன் அவர்களையே சாரும். தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும், சொல்கிறேன். மிகப்பெரிய industrial boom என்றே கூறலாம். மிகப்பெரிய industrial boom அங்கே நிச்சயமாக வரப்போகிறது. VINFAST நிறுவனத்தை கொண்டுபோய் சேர்த்தீர்கள். அதன்மூலம் எங்கள் ஊருக்கு என்ன கிடைக்கிறது என்று பல பேர்கள் கேட்கலாம். ஆனால், VINFAST நிறுவனம் வரும்போது என்ன சொன்னார்கள் என்றால், எங்களுக்குத் தேவையான ஆட்கள் இங்கே கிடைக்காது. அதனால், வெளிமாநிலங்களில் இருந்து எடுக்கிறேன். வெளி மாவட்டங்களில் இருந்து எடுக்கிறேன். அப்படியெல்லாம் சொன்னார்கள். இதனை திறப்பு விழாவின்போது நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர் அக்கா திருமதி கனிமொழி அவர்களும், நானும் அங்கே நிற்கும்போது அவர்கள் சொன்னார்கள். உடனடியாக, இது வந்து தமிழ்நாடு, மற்ற மாநிலங்கள்போன்று இதை நீங்கள் நினைக்கக்கூடாது. இங்கு நீங்கள் எங்கே, எவ்வளவு பெரிய industry அமைத்தாலும், நிச்சயமாக ஒரு மிகப்பெரிய வேலைவாய்ப்புக்கு தகுதியான ஆட்களை எங்களால் தர முடியும் என்று கூறி உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசி துணை முதலமைச்சர் நமது இளந்தலைவர் அவர்களும் கூறி நான் முதல்வன் திட்டத்தின்மூலம் teachers வைத்து train செய்து இப்பொழுது மிகப்பெரிய அளவில் 340 பேர் அங்கு கொடுத்து அதில் 200 பேர் தேர்வு செய்து வெகு விரைவில் VINFAST நிறுவனத்தில் நமது பிள்ளைகள் அந்தப் பகுதியைச் சார்ந்த பிள்ளைகள் வேலைக்கு அமரும் அந்த நாள் வெகுதூரத்தில் இல்லை. திருநெல்வேலி, தூத்துக்குடி இந்த பகுதிக்கு மட்டும் சொல்லிவிட்டீர்கள். மதுரைக்கெல்லாம் என்ன இருக்கிறது என்று கேட்டீர்கள். ஏற்கெனவே மதுரைக்கு மிகப்பெரிய ஒரு வருகிறேன், வருகிறேன்.

திருநெல்வேலி, தூத்துக்குடிக்கு மட்டும் இருக்கிறது. எங்களுடைய தென்காசி மற்றும் கன்னியாகுமரிக்கு என்ன ஆயிற்று என்று நீங்கள் கேட்கிறீர்கள். கன்னியாகுமரிக்கும், தென்காசிக்கும் நிச்சயமாக அறிவிப்புகளில் நல்ல செய்திகள் இருக்கின்றன என்ற நல்ல செய்தியை இங்கே கூறுகிறேன்.

அதேபோல, தொழிற்சாலைகளையே கண்டிராத மத்திய மண்டலம். திருவாருக்கும், நாகப்பட்டினத்திற்கும், தஞ்சாவூருக்கும், முதன்முதலாக வருகிறது, வருகிறது. தஞ்சாவூருக்கும் டெல்டா பகுதிகளுக்கும் மிகப்பெரிய ஒரு தொழில் புரட்சியை செய்தவர் முதலமைச்சர் அவர்கள். அதனால்தான் முதல்முறையாக சிப்காட் அறிவித்த முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில்தான் வெகுவிரைவில் நாகப்பட்டினத்திற்கும் நல்ல செய்தி நிச்சயமாக வரும். வரலாற்றில் முதல்முறையாக தஞ்சை, திருவாரூர், நாகை பகுதிகளுக்கு சிப்காட் அறிவித்து இங்கே அமர்ந்திருக்கிறார்கள் மாண்புமிகு திராவிட நாயகன் அவர்கள். திருச்சியில் ஒரு மிகப்பெரிய electronics cluster jabel-ல் ஏற்கெனவே USA (United States of America)-ல் கொண்டுபோய் sign செய்த அந்தத் திட்டம். ஆக திருச்சியில் மிகப்பெரிய electronics cluster உருவாகப் போகிறது. நம்முடைய புதுக்கோட்டைக்கு என்ன வரப்போகிறது என்று கேட்டார்கள். திருச்சியில் இருந்து அந்த overflow நிச்சயமாக புதுக்கோட்டைக்கும் இருக்கிறது. புதுக்கோட்டையில் ஒரு புதிய சிப்காட்டையும் இங்கே நாங்கள் அறிவித்திருக்கிறோம் என்ற செய்தியை இங்கே கூறி, கோவையைப் பொறுத்த வரைக்கும் நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். YES (Yield Engineering Systems, Inc.) நிறுவனம் அங்கே வந்து ஒரு மிகப்பெரிய தொழிற்பேட்டையை உருவாக்கி YES (Yield Engineering Systems, Inc.) நிறுவனம் இந்தியாவிலேயே முதன்முறையாக semi conductor equipment manufacture-ல் முதல் equipment-ல் manufacture செய்து வெளியில் அனுப்பிய ஒரு நிறுவனம் தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. அந்த நிறுவனத்தையும் அமெரிக்காவிற்கு சென்று கொண்டுவந்து சேர்த்த பெருமை திராவிட நாயகன் அவர்களையேச் சாரும்.

SIPCOT தொழிற்பூங்காக்களைப் பொறுத்தவரையில், ஒரு சில விஷயங்களை மட்டும் தெரிவித்து என் உரையை நிறைவுசெய்கிறேன்.

SIPCOT தொழிற்பூங்காக்களைப் பொறுத்தவரையில், தொடர்ந்து விளைநிலங்கள் எடுக்கப்படுகின்றன என்ற உண்மைக்குப் புறம்பான ஒரு தகவல் பரவிவருகிறது. SIPCOT தொழிற்பூங்காக்களைப் பொறுத்தவரையில், 48,926 ஏக்கர் நிலப் பரப்பளவில் நாங்கள் நிலங்களை எடுத்திருக்கிறோம். அவற்றில், வெறும் 4 ஏக்கர் பரப்பளவு மட்டும்தான் நஞ்சை நிலங்கள். .96 சதவிகிதம் மட்டும்தான் நஞ்சை நிலம். அதையும் தரிசு நிலத்திலிருந்து வேறு இடத்திற்கு கொண்டு செல்ல வழித்தடம் இல்லாததன் காரணமாக, வேறு வழியில்லாத நிலையில்தான், சிறிய அளவில் இந்த இடம் எடுக்கப்பட்டுள்ளது. அதுவும் 1 சதவிகிதத்திற்கும் குறைவாகதான் நஞ்சை நிலம் எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, தொழிலாளர்கள் நலனில் மிகப் பெரிய நம்பிக்கை வைத்து தொழிலாளர்களுக்கு மிகப் பெரிய நலனை திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்கள் செய்துவருகிறார்கள். எனவேதான், TATA உடன் இணைந்து ‘விடியல் Housing’ திட்டத்தில் 6,500 படுக்கைகள் கொண்ட கோவையிலும், ஓசூரிலும் 18,000 படுக்கைகள் கொண்ட housing unit, Foxconn-க்காக சென்னையிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. தோழி விடுதிகள் என்ற திட்டத்தை பல்வேறு இடங்களில் கொண்டு சேர்த்திருக்கிறார், முதல்வர் அவர்கள். தோழி விடுதிகள் என்பது மற்ற இடங்களிலிருந்து சென்னை போன்ற மிகப் பெரிய Industrial area-க்கு மக்கள் வருவதால்தான், இதைத் தவிர்க்கவேண்டும் என்ற நோக்கத்திலும், அவரவர்கள் இருக்கின்ற இடங்களுக்கே அரசு திட்டங்களைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்திலும் கொண்டுவரப்பட்டதுதான் இந்த TIDEL Neo Park. TIDEL Neo Park-ஐ 10 இடங்களில் அறிவித்து, 4 இடங்களில் கட்டி முடிக்கப்பட்டு அனைத்தும் முழுவதுமாக செயல்படுகின்றன. மேலும் 6 இடங்களில் அவற்றுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. TIIC, TANSALT, TANCEM, TIIC, TNPL உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் மிகச் சிறப்பாக பீடுநடை போட்டு இன்றைக்கு TIIC-க்கில் முந்தைய ஆட்சிக் காலத்தில் ஏறத்தாழ 850 கோடி ரூபாய் தான் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால், தற்போது, இரட்டிப்பாக்கப்பட்டு, 1,630 கோடி ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது.

TNPL-ஐப் பொறுத்தவரையில், மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்தார்கள். பல வருடங்களாக பணி நிரந்தரம் செய்யப்படாதவர்களுக்கும் 588 பணியாளர்களுக்கும் ஒரே கையெழுத்தில் உடனடியாக பணி நிரந்தரம் செய்துகொடுத்திருக்கிறார், திராவிட நாயகன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இவ்வாறான பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. TANCEM-ஐப் பொறுத்தவரையில், மேலும் உரிய விலையில் சிமெண்ட் கிடைப்பதை உறுதிசெய்து, தொடர்ந்து சரியான தரமான சிமென்டை TANCEM நிறுவனம் வழங்கிக்கொண்டிருக்கிறது. இந்தத் துறையினைப் பொறுத்தவரையில், இது போன்று அனைத்து விஷயங்களிலும், மிகச் சிறப்பான பணிகளைச் செய்து, திராவிட நாயகன் அவர்களது ஆட்சியில் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் அளவிலான வளர்ச்சியை இத்துறை உறுதி செய்யும் என்று கூறிக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கையின் பதிலுரையை தயார் செய்வதில் எனக்கு துணை நின்று, அனுதினமும் ஆலோசனைகளை வழங்கிய நமது தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், நிதித் துறைச் செயலாளர் அவர்களுக்கும், தொழில் துறைச் செயலாளர் அருண் ராய் அவர்களுக்கும், சந்தீப் சக்சேனா அவர்களுக்கும், சாய் குமார் அவர்களுக்கும், தாரேஸ் அகமது அவர்களுக்கும், மகேஸ்வரன் அவர்களுக்கும், திருமதி பல்லவி பல்தேவ் அவர்களுக்கும், சந்தீப் நந்தூரி அவர்களுக்கும், அஜய் யாதவ் அவர்களுக்கும், செந்தில்ராஜ் அவர்களுக்கும், திருமதி சினேஹா அவர்களுக்கும் மற்றும் திருமதி அலர்மேல்மங்கை உள்ளிட்ட துறை அதிகாரிகள் அனைவருக்கும் எனது நன்றிகளை இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பதிலுரை வழங்கினார்.

---


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே.இ. நாகூர்மீரான்

ஏப்ரல் 27 (2008)



நீதிக்கட்சியில் இணைந்து, பின்னர் திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கிய பின்பு, அதில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட துணைச் செயலாளர், மேலப்பாளையம் நகரச் செயலாளர் என பல பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

நெல்லை மாநகராட்சி உறுப்பினராகவும், மண்டலக்குழு தலைவராகவும், மேலப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


---

சேலம் மாவட்டத்தில் பட்டாசு விபத்து!

## உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

*சென்னை, ஏப்.27-*

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் பட்டாசு வெடித்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமம், பூசாரிப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் நேற்று முன்தினம் (25.4.2025) இரவு சுமார் 8.50 மணியளவில் கஞ்சநாயக்கன்பட்டி திரௌபதி அம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு இருசக்கர வாகனத்தில் பட்டாசு மூட்டையை எடுத்துச்செல்லும்போது எதிர்பாராதவிதமாக பட்டாசு தீப்பிடித்து வெடித்ததில் கஞ்சநாயக்கன்பட்டி, கொட்டமேடுவைச் சேர்ந்த செல்வராஜ் (வயது 29), குருவாலியூரைச் சேர்ந்த சிறுவர்கள் செல்வன். தமிழ்செல்வன் (வயது 11) த/பெ. சேட்டு மற்றும் செல்வன். கார்த்தி (வயது 11) த/பெ.சுப்பிரமணி ஆகிய மூன்று நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காய மடைந்து சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த கொட்ட மேடு வைச் சேர்ந்தலோகேஷ் (வயது 20) த/பெ.தங்கராஜ் என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன் என அறிவித்துள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம். கோபாலகிருஷ்ணன்

ஏப்ரல் 27 (2009)



திருச்சி மாவட்டம், மணப்பாறை நகரத்தில், கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

பத்தாண்டுகளுக்கும் மேலாக நகரக் கழகச் செயலாளராகவும், நகர்மன்ற உறுப்பினராகவும், பின்னர் துணைத் தலைவராகவும், இரு முறை நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, 1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.